சிறந்த புளொக் தயாரிப்பாளர்
Quality
BLOCK
MAKERS
கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 118

National Tamil Daily தேசிய தினசரி

(9-6-65)

விசுவாவசு வைகாசி 27 வளர்பிறை 8 புதன்கிழமை

தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12 போன்: 5830

மராமத்து இலாகா

டைரக்டர் நியமனம் வகுப்புவாதமா?

தமிழ் அரசியல் வட்டாரங்கள் அதிர்ச்சியும் ஆட்சேபமும்

கொழும்பு, செவ்வாய்

மராமத்து இலாகா டைரக்டர் பதவி நியமனத்தில் மராமத்து மந்திரி திரு. மொண்டேகு ஜெயவிக்கிரம பாரபட்சமாகவும் வகுப்புவாத அடிப்படையில் நடந்துகொண்டாரென தமிழர் அரசாங்க வட்டாரங்களும் அரசியல் வட்டாரங்களும் கருதுகின்றன.

உதவி டைரக்டராகவிருக்கும் திரு. எல். வி. வில்லியம்ஸ் தமிழராக இருந்தபடியால்தான் நிரந்தர டைரக்டராக நியமிக்கப்படவில்லையென நேரே கருதுகிறார்கள். முன்னாள் டைரக்டர் திரு பிரேமரத்னவுக்குப் பின்னர் அந்தப் பதவி வகிக்கவேண்டியவர் திரு வில்லியம்ஸாகவேயிருந்தார்

பதவிக்கு வாரிசான ஒருவரை விட்டு மற்றொருவரை நியமித்ததற்கு மராமத்து இலாகா என்ஜினியர்கள் ஆட்சேபனை தெரிவித்திருப்பதுடன் ஒரு கூட்டத்தை நடத்தி பகிரங்கமாக கண்டனம் தெரிவிக்கவும் தீர்மானித்திருக்கிறார்கள் இக்கூட்டம்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது

16-ம் திகதி நடைபெறவிருக்கும் அரசாங்கக்கட்சிக்கூட்டத்தில் இப்பிரச்னை கிளப்பப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது

சென்ற காலத்தில் தமிழர்கள் ஒதுக்கப்பட்டதுபோல இனிமேலும் ஒதுக்கப்படமாட்டார்கள் எனவும் நீதியும், நியாயமும் வழங்குவதே தேசிய அரசாங்கத்தின் நோக்கமெனவும் பிரதமமந்திரி கூறிவருவதைச் சுட்டிக்காட்டிய எம் பி ஒருவர் இப்பிரச்னையை பிரதமரது கவனத்துக்கு கொண்டுவரப்போவதாக தெரிவித்தார் 16-ம் திகதி பார்லிமெண்ட்கூட்டத்தின்போது இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் தெரியவருகிறது

தமிழ்அரசாங்க எழுதுவினைஞர் வட்டாரங்களும் ஆட்சேபம் தெரிவிக்கவிருப்பதாக அறியப்படுகிறது இதுபற்றி அரசியல்தலைவர்களுடன்பேச்சுவார்த்தைகள் நடத்தவும் இவைகள் தயாராகிக்கொண்டிருக்கின்றன

வறுமையின் கோரத்தாண்டவம்
அதிகாரி கண்ணீர் விட்டார்

வவுனியா, செவ்.

வேலையில்லாத் திண்டாட்டமும், அதன் காரணமாக பசியும், பட்டினியும், பிணியும் நாட்டில் மலிந்து வருகின்றனவா? வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது என சகல வகுப்பினர்கள் கலிகின்றார்கள். ஆனால் இவர்களைவிடக் கேவலமான ஒருநேர உணவுக்குக்கூட வழியில்லாத ஏழைகள் இங்கும் இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும் போலத் தோன்றுகிறது. வறுமை! வறுமை! என்று சொன்னாலும் இவ்வளவுபரிதாபமான நிலையை எங்களில் பலர் கேட்டிருக்க முடியாதுதான் வறுமை என்றால் என்ன, பட்டினி என்றால் எந்தவிதமானது என்பதை எடுத்துக் கூறுவதுபோன்ற ஒரு குடும்பத்தை நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்த சமூக சேவை உதவி அதிபதி நேரில்சென்று பார்த்ததுமே கண்ணீர் வடித்தார்;

வவுனியாவில் உள்ள சனம்பன் குளக்கிராமம் அங்கு ஒரு குடும்பம், எட்டு பேர் அதன் மொத்த அங்கத்தவர்கள், இவர்கள் எல்லோருமாக நாளொன்றுக்கு கால் கொத்து அரிசியைத்தான் சாப்பிடுகிறார்கள்; சோறாகவல்ல; கஞ்சியாக.

நேற்று சமூகசேவைஉதவி அதிபதியும், வவுனியா எம்பியும் இந்த குடும்பத்தினர் இருக்கும் குடிசைக்கு நேரில் சென்றபோது கால்கொத்து அரிசி கஞ்சியாக சமைக்கப்பட்டதாம. சமூகசேவை அதிபதி அழுதுகொண்டே குடும்பத்தினரிடம் கேட்டார் "இத்தக் கஞ்சிபோதுமா?" என்று 'பட்டினியினால் பீடிக்கப்பட்டு, வேலையின்றி இருக்கும் எமக்கு இதுவே போதும்" என்று பதிலளித்தார் குடும்பத்தலை

(6-ம் பக்கம் பார்க்க)

இலங்கைப் பெண்ணை திருமணம் செய்தும் பதிவில்லை
விசாவை நீடிக்கமறுத்து வெளியேற்ற உத்தரவு

குரும்பசிட்டி, செவ்.

மயிலிட்டி கடற்கரையில் வள்ளம் கட்டுபவரும் [illegible]வருமான சிவதாசன் ஆசாரியார் என்பவரை உடனடியாக நாடு கடத்தும் உத்தரவினை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. வி. பி. சமரசிங்கா பிறப்பித்துள்ளார். இவ்வுத்தரவை மாற்றி சுமார் 6 மாதகாலத்திற்கு தற்காலிக இவருக்கு விசாவழங்கும்படி காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ் ஜே வி செல்வநாயகம் நிரந்தரக் காரியதரிசியை சந்தித்துப் கேட்டுக்கொண்ட போதிலும் நாடு கடத்தும் உத்தரவு வாபஸ் பெற மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதுசம்பந்தமாக கூறப்படுவதாவது: தென்னிந்தியாவைச் சேர்ந்த திரு. சிவதாசன் ஆசாரியார் மானிப்பாயிலுள்ள பெண் ஒருவரை விவாகம் செய்தார், அவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளன. இவருடைய திருமணம், குழந்தைகளின் பிறப்பு பதிவு செய்யப்படவில்லை பங்கீட்டுச்சீட்டுப் புத்தகமும் இவருக்கு கிடையாது. 1956-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் திகதியுடன் விசா காலாவதியானது. 1961-ம் ஆண்டும் கட்டாய நாடு கடத்தும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. தாய் நாடு திரும்பவில்லை. மயிலிட்டி மீனவர்கள் பலரிடம் பெருந்தொகையானபணத்தை புதிய வள்ளம் கட்டிக்கொடுப்பதற்காக பெற்றுக்கொண்டார் ஆனால் ஆசாரியார் தற்போது பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவல் முகாமில் வைக்கப்பட்டுள்ளார், வள்ளம் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடை நடுவில் இதனால் கைவிடப்பட்டுள்ளது. மீனவர்கள் பலரும் பணம் திரும்பக் கிடைக்காததினால் திரு. செல்வநாயகத்திடம் வள்ளம் கட்டும் வேலைகளைப்பூர்த்தி செய்ய விசாவை 6 மாதகாலம் நீடித்துத் தரும்படி கேட்டுக் கொண்டனர். திரு செல்வநாயகம் நிரந்தரக்காரியதரிசியைச் சந்தித்து நிலைமையைத் தெளிவாக எடுத்துக் கூறிய போதிலும் யாழ்ப்பாணப் பகுதியில் அதிகமான வள்ளம்கட்டும் பேர்கள் இருப்பதால் இவருடைய விசாவை நீடிக்க வேண்டிய அவசியம் இல்லை எனத்தெரிவித்துவிட்டாராம்.

சமூகசேவை உதவி அதிபதி வவுனியாவுக்கு விஜயம்
பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டார்

வவுனியா, திங்கள்

சமூகசேவைப் பகுதி உதவி அதிபதி திரு. ஏ. ஜீ. ஏ. ரூபசிங்கா நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்து சூறாவளியாலும், வரட்சியாலும் பாதிக்கப்பட்ட பல இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார்,

200 கிராமங்களுக்கு மேற்பட்ட வவுனியா மாவட்டத்தில். சூறாவளியாலும், கடும் வரட்சியாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்குநிவாரணவேலை கொடுக்க தாமதம் ஏற்பட்டதுபற்றி வவுனியா எம் பி திரு தா சிவசிதம்பரம் கடந்தவாரம் சமூக சேவைப்பகுதி அமைச்சரையும், சமூக சேவை அதிபதியையும் பேட்டி கண்டார். அதன்பயனாக மாவட்டத்தின் நிலைமையை நேரில் கண்டறிய திரு ரூபசிங்கா இங்கு விஜயம் செய்தார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள சகல கிராமச் சங்கங்களின் தலைவர்களும், நகரசபைத் தலைவரும் வவுனியா எம் பியுடன் சமூகசேவை உதவி அதிபதிக்கு மாவட்டத்தின் நிலைமையை விளக்கமாக எடுத்துரைத்தனர்.

67 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் காலபோகத்தில் ஒன்றேகால் இலட்சம் புசல் நெல்லு வழக்கமாக விளைவிக்கப்பட்டது. சென்றவருடம் ஏற்பட்ட புயலாலும் வரட்சியாலும் 15 ஆயிரம் புசல்கூட விளையவில்லை என்பதுபற்றியும் இதனால் பாதிக்கப்பட்ட மக்கட்கும் சூறாவளியால் வீடுகள், உடமைகள், வான்பயிர்கள் இழந்து சாப்பாட்டுக்கு கஷ்டமடையும் மக்களின் நிலைபற்றியும் சமூக சேவை அதிபதியிடம் வவுனியா எம் பி விளக்கமாகஎடுத்துக் கூறினர்.

63 000 மக்கள் சனத்தொகை கொண்ட வவுனியாவில் ஆகக்குறைந்து 30 ஆயிரம் மக்கள் பாட்டாளி வேலை செய்பவர்கள் என்றும் இதில் 3500பேர்களுக்கு மாத்திரம், நடந்த 5

(6-ம் பக்கம் பார்க்க)

விருந்து வைபவங்களுக்கு இது தருணமல்ல
விருந்துபசாரத்தில் பேச்சு

சுழிபுரம், செவ்வாய்

"வரவேற்புபசாரங்களும், விருந்துகளும்வைத்து கொண்டாடி மகிழ்வதற்கு இதுவல்ல நேரம். நாம் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தமிழ்பேசும் மக்கள் மத்தியிலுள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களைத் தாங்களே தாக்குவதிலும் ஒருவர் கூறுவதை மற்றவர் குறை கூறுவதிலும்தான் காலத்தைப் போக்குகின்றனர். இந்நிலை மாறவேண்டும். வீடு பற்றி எரியும்போது வீட்டில் பற்றிய நெருப்பை அணைக்காமல் நமக்குள் நாம் சண்டை பிடித்தால் நிலைமை என்னவாகும்?"

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு சுழிபுரம் கிராமசபைப் பகுதியிலுள்ள சனசமூகநிலையங்கள் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் அவருக்களித்த இராப்போசன விருந்துவைபவத்தின்போது பேசுகையில் முன்னாள் நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. அ. தையல்பாகர் பேசுகையில் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி அதிபர் திரு. எஸ் சி மாணிக்கவாசகர் விழாவுக்குத் தலைமைதாங்கினர்.

(6-ம் பக்கம் பார்க்க)

இன்று

நயினை நாகபூஷணி அம்மாள் மணவாளக்கோல உத்சவத்தை யொட்டி திரு. மணிபாகவதர் இரவு 8 மணி முதல் பாலாம்பிகையின் பக்தி என்னும்சங்கீத கதாகாலக்ஷேபம் செய்வார்.

●

நெல்லியடி முருகமூர்த்திகோவில் உற்சவத்தில் ஆசிரியர் திரு. நா. பொன்னம்பலம் "அருணகிரிநாதர்" என்னும் பொருள் பற்றி கதாகாலக்ஷேபம் செய்வார்.

மணிவாக்கு

உங்களுக்குள்ளே வசிப்பவர்தான் உங்கள் குரு. வெளியே மனித உருவில் வந்து உபதேசித்து வழி காட்டியவர் அவரே. அவருக்கு பிறப்பு இறப்பு கிடையாது. அவர் எப்போதும் உங்களுக்குள் இருப்பதால், அவரைக் காணவில்லையே என்று ஏக்கப்படத் தேவையில்லை.

— சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

EELA NADU National Tamil
Daily. Post Pox 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
வைகாசி மீ 27 உ (9-6-65)

யாழ்ப்பாண விளையாட்டு அரங்கு

யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கின் திறப்புவிழா இன்று நடைபெறுகிறது. விளையாட்டுத் துறையில் மட்டுமல்லாது யாழ்ப்பாணத்தின் சரித்திரத்திலும் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும் இந்நிகழ்ச்சி எதிர்கால முன்னேற்றத்திற்கு நம்பிக்கையளிப்பதாகும்.

விளையாட்டுகள் உடல் வளர்ச்சிக்கும் மட்டுமல்லாது போட்டியும்; பூசலும் குரோதமும் நிறைந்த இந்த உலகில் ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்த உதவி புரியும் சாதனமுமாகும். வேறுபட்ட இனங்களுக்கிடையிலும் நாடுகளுக்கிடையிலும் நட்புறவையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தும் கலாசாரத் தூதுவர்களாக விளையாட்டு வீரர்கள் விளங்கி வருகின்றனர். விளையாட்டுக்களில் திறமை காட்டுவதன் மூலம் விளையாட்டுவீரர்கள் தங்கள் நாட்டிற்குப் புகழ்தேடிக் கொடுக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் பல்வேறு உடற் பயிற்சிகளிலும் விளையாட்டுக்களிலும் திறமைவாய்ப் பிரகாசிக்கக் கூடிய இளைஞர்களிருப்பினும் தகுந்த விளையாட்டு அரங்கும் போதிய பயிற்சியும் இல்லாமல் பிரகாசிக்க முடியாமலுள்ளனர். நீண்டகாலமாக இருந்துவந்த இந்தக்குறை விரைவில் நீங்கி எமது இளைஞர்கள் விளையாட்டுத்துறையில் எமக்குப் புகழ் தேடித் தரக்கூடிய வாய்ப்பு இன்று திறந்துவைக்கப்படும் விளையாட்டு அரங்கின் மூலம் கிடைக்குமென எதிர் பார்ப்போம்.

விளையாட்டு அரங்கு இன்று திறந்து வைக்கப்படுகிறதென்றாலும் அதன் வேலைகள் பூர்த்தியடையவில்லை, இதன் முதற்கட்ட வேலைகள் தான் முடிவடைந்துள்ளன. திட்டமிட்டபடி நவீன விளையாட்டு அரங்கின் முழுவேலைகளும் விரைவில் பூர்த்தியடைவதற்கு விளையாட்டுப் பிரியர்களும் பொதுமக்களும் ஒத்துழைப்பும், ஆதரவும் அளிப்பார்களென நம்புகிறோம்.

இலங்கையின் இரண்டாவது முக்கிய நகரான யாழ்ப்பாணத்தில் முதல் தரமான நவீன வசதியுடன் கூடிய விளையாட்டு அரங்கு எவ்வளவு அவசியமாகுமென்பதை விளக்கத் தேவையில்லை, இந்த அரங்கத்தைக் கட்ட வெற்றிகரமான முயற்சி எடுத்தவர்களுக்கு, நகரபொதுமக்களின் மனப் பூர்வமான நன்றி உரியதாகும். கொழும்பில் நவீன முறையில் அமைக்கப்பட்ட "சுகததாஸா ஸ்டேடியத்தை"ப்போல் இங்கு அதிக இயற்கை வாய்ப்புகள் அமைந்த கோட்டைப்பகுதியில் விளையாட்டு அரங்கை அமைக்க அமைச்சர் சுகததாஸா கூடுதலான அரசாங்க உதவியையும் அளிக்கச் செய்வாரென்று எதிர்பார்ப்பது மிகையல்ல.

விண்வெளிசாதனை

விண்வெளியில் நான்கு தினங்கள் சஞ்சரித்து பூமியை 62 தடவைகள் வலம் வந்து, அந்தரத்தில் இருபது நிமிஷ நேரம் நடந்து சென்று பெரும் சாதனைகளை ஏற்படுத்தியபின் சந்திர மண்டலப் பிரயாணத்துக்கான முயற்சிகளில் மேலும் சில தகவல்களைச் சேகரித்துக் கொண்டு அமெரிக்கவிண்வெளி இரட்டையர்கள் பூமிக்குத் திரும்பிவந்து சேர்ந்துள்ளனர், அவர்களுக்கு நாமும் எமது மனப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவிக்கின்றோம்,

விண்வெளிப் பயணத்தில் விஞ்ஞானிகளுக்கே புரியாத சாதனைகளைக் கண்டு பொதுமக்களாகிய நாமும் 'மகத்தான சாதனை' என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல இருக்கிறது. அடுத்தது என்ன என்பதை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்போம். சென்ற மார்ச் மாதத்தில் சோவியத் விண்வெளிவீரர் விண்வெளியில் நடந்துசென்று முதல் முதலாக ஓர் அரிய சாதனையை ஏற்படுத்தினர். இப்பொழுது அமெரிக்க வீரர் சிறிது நேரம் அதிகமாக விண்வெளியில் நடந்துசென்று மற்றொரு சாதனையை ஏற்படுத்தியுள்ளார். ஆக மொத்த விண்வெளிப்பிரயாண ஆராய்ச்சியிலும் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் போட்டியிடுகின்றன; சந்திர மண்டலத்துக்குச் சென்றாலும் அங்கும் சந்திர மண்டலத்துக்குச் செல்லுவது மனிதன் பெருமைப்படக்கூடிய பெரியசாதனைதான். ஆனால் இந்தப் பூமண்டலத்தில், குறுகிய தேசிய வாதங்களையும்போட்டிகளையும் விட்டு. வல்லரசுகள் தங்களுக்கிடையே எல்லாத் துறைகளிலும் ஒத்துழைக்க முன்வரின், அது சந்திரமண்டல வெற்றியைவிட அதிக பயனும் நன்மையும் மனித வர்க்கத்துக்கு அளிப்பதாக இருக்கும்.

யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கின்வரலாறு

1959-ம் ஆண்டில் ஆரம்பித்து இன்று நடைபெறும் திறப்புவிழா

— எஸ். சிவஞானம் —

(விளையாட்டு அரங்குச்சங்க கௌரவ காரியதரிசி)

யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கின் முதற்கட்டம் பூர்த்தியாகி இன்று திறப்புவிழா நடைபெறுகிறது. தேசியசேவைகள், விளையாட்டுப்பகுதி மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா இன்று இந்த விளையாட்டரங்கை சம்பிரதாய முறைப்படி திறந்துவைக்கிறார். இந்த விளையாட்டு அரங்கின் வரலாற்றை இக் கட்டுரை சுருக்கமாகக் கூறுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு ஒரு விளையாட்டு அரங்கு அத்தியாவசியமென்பது முதன் முதல் 9959-ம் ஆண்டில் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுது யாழ்ப்பாண மேயராகவிருந்த திரு. அல்பிரெட் துரையப்பாவின் தலைமையில் விளையாட்டுப் பிரியர்கள் இதற்கென ஒரு கமிட்டியை ஆரம்பித்துவைத்தனர். எதிர்பாராத அரசில் மற்றும் ஸ்தலதாபன நடவடிக்கைகளின் காரணமாய் இந்நோக்கத்தைப் பூர்த்திசெய்ய முடியாதுபோய்விட்டது.

வடமாகாண பொலிஸ் சுப்ரின்டென்ற் திரு. ஜே. வான்சவ்ட், அவரது உதவியாளர் திரு. ஏ. எஸ். மரிய நாயகம் என்பவர்களின் தீவிர முயற்சிகளின் நிமித்தம் இந்த இயக்கம் மீண்டும் உற்சாகமான கட்டத்தை 1962-ம் ஆண்டின் பிற்பகுதியில் அடைந்தது. திரு. ஜே. வான்சன்டன் அவர்களால் கூட்டப்பட்ட ஆரம்ப கூட்டமொன்று 20-3-63-ல் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் பழைய யாழ். விளையாட்டு அரங்குக் கமிட்டியின் தலைவரும் அப்பொழுது யாழ் பாராளுமன்ற உறுப்பினருமாயிருந்த திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் நடைபெற்றது. சட்டதிட்டங்களின் முதலாவது ஷரத்தின் பிரகாரம் பழைய கமிட்டிக்கும் புதிய கழகத்திற்கும் ஒரு தொடர்பு ஏற்படலாயிற்று அதாவது "இக்கழகம் யாழ். விளையாட்டரங்கு கமிட்டியைத் தொடர்ந்து சட்டரீதியாகச் செயலாற்றும்." யாழ்ப்பாணப் பகுதி அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சி தலைவராகவும் யாழ்ப்பாண உதவி பொலிஸ் சுப்ரின்டென்ற் திரு ஏ. எஸ். மரியநாயகம் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஒரு செல்வாக்குள்ள கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது யாழ் மேயர் (உத்தியோக பூர்வம்) வடமாகாண பொலிஸ் சுப்ரின்டென்ற் (உத்தியோக பூர்வம்) திரு அல்பிரட் டி. துரையப்பா, திரு. ஏ. ஈ. தம்பர், திரு. சி. சபாரத்தினம், திரு. வி சத்தியநாதன் ஆகியோர் கழகத்தின் ட்ரஸ்டிகளாக நியமிக்கப்பட்டார்கள். 1963 ஜூலை மாசத்தில் திரு வித்தாச்சிக்குப் பதிலாக திரு ஜே வான்சன்டன் தலைவரானார் 1965 பெப்ரவரி மாதம் திரு ஏ எஸ் மரியநாயகம் மாற்றலாகிச் சென்றபோது இச்சரிதையை எழுதுபவர் காரியதரிசியானார் பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டமையால் அவற்றைப் பற்றி இங்கு குறிப்பிடத்தேவையில்லை.

தகுதியான மைதானம்

ஒரு விளையாட்டு அரங்கை ஏற்படுத்துவதற்கு ஒரு தகுதியான மைதானத்தைக் கண்டுபிடிப்பதே கழகத்தின் உடன் பிரச்சினையாக இருந்தது. யாழ்ப்பாணக் கோட்டையோடிணைந்துள்ளதும் யாழ்ப்பாணப் பொலிசாருக்கு உரித்தானதுமான பொலிஸ் மைதானமே இதற்குத் தகுதியான ஒரே ஒரு மைதானமாகும். விளையாட்டு அரங்குக் கழகத்திற்கு இது அத்தியாவசியமென உணர்ந்த பொலிஸ் சுப்ரின்டென்ற் திரு ஜே வான்சன்டனும் அவரது உதவியாளர்களும் பொலிஸ் மைதானத்தை விளையாட்டு அரங்கக் கழகத்திற்குத் தாராள சிந்தையுடன் கொடுத்துதவத் தமது சம்மதத்தை அளித்தனர். அடுத்தபடியாக விளையாட்டு அரங்குக் கழகத்திற்குக் கொடுத்துதவ பண்டைப் பொருட்பகுதிக் கமிஷனரையும் கலாச்சாரப் பகுதி மந்திரியையும் உடன்படச் செய்யவேண்டியிருந்தது யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினரான திரு அல்பிரட் துரையப்பா உடனடியாக இதை ஸ்தரமாகச் செய்துள்ளார்

பொலிஸ் மைதானம் ஒரு கிண்ணவடிவமாக இருந்ததென்பது பொதுஜனத்தின் ஞாபகத்திலிருக்கலாம். இதைச் சமமாக்கப் பாரதூரமான வேலைசெய்யவேண்டியிருந்தது. ஒரு டிராக்டரையும் அதை இயக்குபவரையும் அனுப்பி பிறவுன் அன் கம்பெனி லிமிட்டெட்டார் இலவசமாகச் சமப்படுத்தியுள்ளனர். பின்னர் நில அளவையாளரின் முறைப்படி சரிசமமாக்கப்பட்டது. 1964-ல் மழையின்மையால் புல நடுவதில் பின்வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது ஆயினும் 240,200 சதுர அடி நிலப்பரப்பில் செயற்கைமுறையில் புல் வளர்த்ததும் பூர்த்தியாயிற்று தண்ணீர் அடித்து நிலத்தை முறையாய் வைத்திருப்பதற்கென தண்ணீர் குழாய்கள் மைதானத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ளன கால்நடைகள் சேதமேற்படுத்தாது தற்காலிகமாக சுற்றிவர ஒரு முள்ளுக்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது மத்தியப் பகுதியில் மேடையாகவுள்ள நிலத்தில் சிமெந்துக் கற்களால் படிகள் அமைக்கப்பெற்று 8750 அடி நீளத்திற்கு இருப்பதற்கான வசதி செய்யப்பட்டிருக்கிறது

அத்தியாவசிய தளபாடங்கள்

மைதானத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான அத்தியாவசிய தளபாடங்களைப் பெற்றுள்ளோம் விளையாட்டுகளுக்குத் தேவையான உபகரணங்கள் யாவற்றையும்கொடுத்துதவுமாறு "ஏசியா பவுண்டேசன்" ஸ்தாபனத்தாரிடம் விண்ணப்பித்திருக்கிறோம் இவை கிடைக்குமென எதிர் பார்க்கிறோம்

(6-ம் பக்கம் பார்க்க)

ஐயாறன் எழுதுவது

வவுனியா காட்டுவழியாக மட்டக்களப்புக்கு காரில் சென்றோம். வழியிலே ஒரு நரி இடமிருந்து வலமாகப் பாய்ந்து சென்றது. நரி வலம் போனால் நல்லதா, இடம்போனால் நல்லதா? மேலே விழுந்து பிடுங்காமல் போனால் நல்லது என்று செட்டிநாட்டிலே கூறுவதுண்டாம். வலமாகச்சென்ற அந்த நரி காரின் சத்தத்தைக் கேட்டு பாய்ந்தோடி காட்டுக்குள் புகுந்து மறைந்துவிட்டது. அது வலம்போனால் நல்லதென்று ஓரன்பர் சொன்னார். நரி சகுனம் உண்மையா, என்ன நடக்கிறது என்று பார்க்கலாமென்றிருந்தேன்.

* * *

வழிநெடுக பலபல இடங்களிலும் புத்தம்புது கத்தரிக்காய், வெண்டைக்காய், தக்காளி, போஞ்சி, பச்சை மிளகாய், பூசணி, பறங்கிக்காய், பப்பாளிப்பழம் முதலிய பலபல காய்கறிகளை விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள் சில இடங்களில் புட்டிகளில் காட்டுத் தேனும், வைத்துள்ளனர். 'கடை'யில் காவலுக்கு யாருமில்லை. ஓரிடத்தில் அழகான பூனையையும், குட்டியையும் கட்டிப்போட்டிருந்தனர், யாராவது சென்றதும், அந்தப் பூனை மியாவ், மியாவ் என்று கத்துகிறது. அதைக்கேட்டதும், பக்கத்திலே காட்டுக் குடிசையிலுள்ள சிங்களப் பெண் வந்து என்னவேண்டுமென்று விசாரிக்கிறார்.

விலையெல்லாம் எப்படித் தெரியுமா? நம்பவே முடியவில்லை. காய்கறிகளெல்லாம் ராத்தல் 8 சதம்! பச்சைக் கொச்சிக்காய் 15 சதம். தேசிக்காய் ஒன்று ஒரு சதம். பெரிய பப்பாளிப்பழம் யாழ்ப்பாணத்தில் ஒரு ரூபாய் விற்பது அங்கு எவ்வளவு தெரியுமா? 18 சதம்தான்! கொம்புத்தேன் போத்தல் நாலரை ரூபாய்,

வியாபாரிகள் லொறியில் வந்து இன்னும் அதிக மலிவாக வாங்கிச்சென்று, பலமடங்கு விலை வைத்து, விற்பதாகத்தெரிகிறது. காட்டில் காய்கறிகள் செழிப்பாக விளைகின்றன, தக்க முயற்சி செய்தால், நாட்டில் காய்கறிப் பஞ்சமே இல்லாமல் செய்துவிடலாம்.

* * *

வழியிலே பொலன்னறுவை சிவன்கோவில் முதலியவற்றைப் பார்த்துச்சென்றோம். பலமான செங்கல் சுவர்கள், பல நூற்றாண்டுகளாகியும் அப்படியே உள்ளன. முன்காலத்தில் தமிழர்கள் அங்கு செங்கோல் நடத்தியபோது, அந்த இடமெல்லாம் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கவேண்டும்? காலச்சக்கரம் எப்படி எல்லாம் சுழல்கின்றது. அந்தச் சுழற்சியாலே என்னென்ன மாறுதல்கள்! மீண்டும் அந்த மாதிரிக் காலம் வருமா? அந்த இடங்கள் புதுப் பொலிவு பெறுமா? என்று ஏதேதோ எண்ணங்கள்!

மகாவலி கங்கையிலே இரு கரையும் புரள பெருவெள்ளம். பொலன்னறுவை ஏரியில் அந்த வெள்ளம் கலந்து, பக்கத்து பூமியெல்லாம் ஒரே செழிப்பு இந்த ஏரியிலிருந்தே மகாவலியை வடமாகாணத்துக்குத் திருப்ப முடியுமென்றார் அன்பர். கடலில் வீணாகும் அந்தத் தண்ணீரை நம யாழ்ப்பாணத்துக்கு வரச் செய்துவிட்டால், இங்கு புதுயுகமே ஆரம்பமாகிவிடும். தேசிய அரசாங்கம் இதைச் செய்தால், தமிழரின் நன்றியையும் ஒத்துழைப்பையும் என்றென்றும் பெறக்கூடும். திருவருள் இதற்குத் துணைசெய்ய வேண்டும்.

* * *

மட்டக்களப்பிலே வானுயர்ந்த தென்னைமரங்கள் வருக வருக என்று வரவேற்கின்றன. கடல் ஏரிகளும் செழிப்பான

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

தோப்புகளும் கரையே அழகு செய்கின்றன. பல அன்புள்ளங்கள் எங்களை வரவேற்றன.

ஆனால் அந்நகரில் சைவ ஹோட்டல் ஒன்றுகூடக் கிடையாதாம்! முன்னர் சைவ ஹோட்டலாக ஆரம்பித்தவர் வியாபாரமின்மையால் அதை 'மிலிட்டெரியா'க்கிவிட நேர்ந்ததாம் அங்கிருந்த இருநாட்களும் சாப்பாட்டுக்குக் தகராறு! நரி வலம்சென்றும் இப்படியா? ஒருவேளை சகுனச்சட்டத்தை நரி அடியோடு மாற்றிவிட்டதோ! என்று எண்ணுகையில், அவ்வூரிலுள்ள வீரகத்தி ஆனைப் பந்தி பிள்ளையார்கள் அந்த அகாலத்திலே அன்புடன் அருள்செய்து எங்கள் பசியைப்போக்கினர். நரியின் சகுனச்சட்டம் மாறவில்லை என்பதையும், அந்தப் பிள்ளையார்களின் பேரருளையும் தெரிந்துகொண்டேன்.

* * *

குற்றமிலாதார் குரைகடல்
சூழ்ந்த கோணமாமலையமர்ந்
தாரை, கற்றுணர் கேள்விக்
காழியர் பெருமான் கருத்துடை
ஞானசம்பந்தன், உற்றசெந்
தமிழார் மாலையீரைந்தும் உரை
ப்பவர் கேட்பவர் உயர்ந்
தோர் சுற்றமுமாகித் தொல்
வினையடையார் தோன்றுவர்
வானிடைப்பொலிந்தே.

—திருஞானசம்பந்தசுவாமிகள்

அமெரிக்க விண்வெளி இரட்டையர் சுகமே

பூமிக்குத் திரும்பினர்

உலகத்தலைவர்களும் விஞ்ஞானிகளும் பாராட்டு

கென்னடிமுனை, ஜூன் 8

விண்வெளியில் நான்குநாட்கள் சஞ்சரித்து உலகை 62 தடவைகள் வலம் வந்தபின் அமெரிக்க விண்வெளி இரட்டையர் மேஜர் வைட்டும், மேஜர் மக்டிவைட்டும் பூமிக்குச் சுகமே திரும்பிவந்துசேர்ந்தனர், ஏற்கனவே திட்டமிட்ட இடத்துக்கு சுமார் 50 மைல் தூரத்தில் அவர்கள் அத்லாந்திக் சமுத்திரத்தில் இறங்கினர். ஹெலிகாப்டர் மூலம் அவர்கள் மீட்கப்பட்டு 'வொஸ்க்' என்ற விமானந்தாங்கிக் கப்பலுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

ஜனாதிபதி பாராட்டு

விமானந்தாங்கிக் கப்பலில் அவர்கள் இருக்கும்பொழுது வெள்ளை மாளிகையிலிருந்து அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் அவர்களுடன் டெலிபோனில் பேசினார். ஜனாதிபதி தமது உளம்நிறைந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் விண்வெளி இரட்டையருக்கு வழங்கினார். சோவியத் விஞ்ஞானிகளிடமிருந்தும் அமெரிக்க விண்வெளி இரட்டையருக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. உலகத்தலைவர்களிடமிருந்தும் விஞ்ஞானிகளிடமிருந்தும் பாராட்டுக்கள் வந்து குவிந்தவண்ணமுள்ளது.

வைத்திய பரிசோதனை

விண்வெளி இரட்டையர் இருவரும் உடனடியாக வைத்தியபரிசோதனைக்குட்பட்டனர். மூன்றுதினங்கள் இப்பரீட்சை நடைபெறும். அவர்களிருவரும் உடல்நலத்துடனிருப்பதாகவும் அவர்களுக்குப் பசியெடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

விண்வெளியில் இதுவரை மனிதன் சஞ்சரித்தவைதவிட அதிக நாள் அதாவது நான்கு தினங்கள் சஞ்சரித்ததுடன் விண்வெளியில் இருபது நிமிஷங்கள் நடந்து சென்றதும் இப்புதிய பரீட்சையில் நிகழ்த்தப்பட்ட குறிப்பிடக்கூடிய சாதனையாகும்.

கேற்றிரவு இலங்கை நேரப்படி 10 மணி 49 நிமிஷத்துக்கு இவர்கள் இறங்கினர். கென்னடி முனையிலிருந்து அவர்கள் விண்வெளிப் பிரயாணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து 400 மைல் தூரத்தில் இறங்கினர்.

அமெரிக்கர் மகிழ்ச்சி

விண்வெளிப் பிரயாணத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள இந்த முன்னேற்றம் குறித்து அமெரிக்க விஞ்ஞானிகள் பேரானந்தம்கொண்டுள்ளனர். அடுத்த திட்டத்தைத் திட்டமிட்டபடி மேற்கொள்வதில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். ஆகஸ்ட் மாதத்தில் மேலும் இரு விண்வெளி இரட்டையர் விண்வெளிப்பிரயாணத்தை மேற்கொள்வர். இத்திட்டத்தின்படி அவர்கள் ஏழுதினங்கள் விண்வெளியில் சஞ்சரிப்பர்.

'ஜெமினி' என்ற விண்வெளிக்கலத்தில் விண்வெளியில் சஞ்சரித்த மேஜர் வைட்டும், மேஜர் மக்டிவைட்டும் பூமிமட்டத்துக்கு 100 மைல் உயரத்தில் விநாடிக்கு ஐந்து மைல் வேகத்தில் உலக வலம் வந்தனர்.

ஒருங்கிணைந்த எல்லைப் பாதுகாப்புப் படை

இந்திய உள்நாட்டு மந்திரிகள் தீர்மானம்

புதுடில்லி ஜூன் 8

ஐக்கியமான ஒருங்கிணைந்த எல்லைப் பாதுகாப்புப்படையை அமைப்பதென புதுடில்லியில் நடைபெற்ற இந்திய ராஜ்யங்களின் உள்நாட்டு மந்திரிகளின் மகாநாடு முடிவு செய்துள்ளது.

இந்திய எல்லைகளில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி மகாநாடு பரிசீலனை செய்தது.

ஊர்காவல் படைகளையும் தொண்டர்படைகளையும் வலுப்படுத்த வேண்டுமென்றும் அவைகளுக்கு தீவிரபயிற்சியும் ஆயுத விநியோகமும் அளிக்கவேண்டுமெனவும் மகாநாட்டில் கருத்துத்தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் ஆபத்து ஏற்படக்கூடிய பட்டினங்களின் பாதுகாப்பை வலுப்படுத்துவதுபற்றியும் வேவுபார்க்கும் பிரிவை திறமைப்படுத்துவதுபற்றியும் மகாநாடு ஆலோசனை செய்தது.

எல்லைப் பகுதி மக்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பது பற்றியும் மகாநாடு பரிசீலனை செய்தது.

வகுப்பு ஒற்றுமையைக் குலைத்து துவேஷத்தை மூட்டக்கூடிய முறையில் எழுதும் பத்திரிகைகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று மகாநாட்டில் கருத்துத்தெரிவிக்கப்பட்டது.

தென் வியட்நாமில்

இரண்டு கிராமங்கள் வியட்காங் வசமாகின

600 அமெரிக்க துருப்புகள் சிக்கிக்கொண்டதாக தகவல்

சைகோன், ஜூன் 8

தென்வியட்நாம் தலைநகர் சைகோனுக்கு வடகிழக்கே இரண்டு கிராமங்களை வியட்காங் கொரில்லாக்கள் தம்வசம் பிடித்துக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு நிலைமை மோசமாகவும் குழப்பமாகவும் இருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இப்பகுதியில் பெருமளவில் வியட்காங் கொரில்லாக்கள் இருக்கின்றனராம். இக்கிராமங்களிலிருந்து வெளி இடங்களுக்கான சகல தொடர்புகளையும் வியட்காங் துருப்புகள் துண்டித்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் 600 அமெரிக்க துருப்புகள் இருப்பதாக வாஷிங்டன் செய்தியொன்று கூறுகின்றது.

சென்னை வெடி விபத்து

மாண்டவர் தொகை மூன்றாக உயர்வு

சென்னை, ஜூன் 8

சென்னைத் துறைமுகத்தில் இரு தினங்களுக்கு முன் ஏற்பட்ட வெடி விபத்தில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் உயிரிழந்தனர். இவர்களுடன் சேர்த்து இவ் விபத்தில் மாண்டவர் தொகை மூன்றாக அதிகரித்துள்ளது.

இவ் வெடிவிபத்தின் விளைவாக 1.6 லட்சத்துக்குச் சேதமேற்பட்டுள்ளது என்று உத்தியோகபூர்வமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

விபத்தினால் ஏற்பட்ட சேதங்கள் திருத்தப்பட்டுவருகிறது. இவ் விபத்து குறித்து விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

* * *

சுரங்கவெடிவிபத்தில் 100 பேர் பலி

பெல்கிரேட், ஜூன் 8

மத்திய யூகோஸ்லேவியாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் நேற்று ஏற்பட்ட ஒரு வெடிவிபத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் மாண்டனர். பலர் காயமடைந்தனர். இதுவரை நூறு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

* * *

ஜோன்சன்-மென்ஸிஸ் சந்திப்பு

வாஷிங்டன், ஜூன் 8

லண்டனில் அடுத்தவாரம் ஆரம்பமாகவிருக்கும் காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு லண்டனுக்குச் செல்லும் அவுஸ்திரேலிய பிரதமர் திரு. ரொபர்ட் மென்ஸிஸ் வழியில் நேற்று வாஷிங்டன் வந்து சேர்ந்தார். வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி திரு. லிண்டன் ஜோன்சனை அவர் சந்தித்துப்பேசினார். வியட்நாம் நிலைமைபற்றி அவர்களிருவரும் பேசியதாகத் தெரிகிறது.

வியட்நாம் தாக்குதல்

சைகோன், ஜூன் 8

நேற்று வடவியட்நாமில் தென்வியட்நாம் அரசாங்க விமானப்படையும் அமெரிக்க ஜெட் போர்விமானங்களுமாக 90 விமானங்கள் கடும் தாக்குதல் நடத்தின. பாலங்கள் ராணுவ நிலையம், இராணுவ வானொலி நிலையம், ரடார் நிலையம் ஆகியவைகள் மீது தாக்குதல் நடத்தின.

வடவியட்நாம் வியட்காங் கப்பூனிட் துருப்புக்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் சீனாவில் தயாரிக்கப்பட்டவையாகக் காணப்பட்டனவாம். 25 ஆத்தல் குண்டுசெலுத்தக்கூடிய பீரங்கியொன்றும் கைப்பற்றப்பட்டதாம்.

மொரோக்கோவில் அவசர காலநிலை பிரகடனம்

பார்லிமெண்டைக் கலைத்து நாட்டின் நிர்வாகத்தை மன்னர் ஏற்றார்

ரபாட், ஜூன் 8

மொரோக்கோ பார்லிமெண்டைக் கலைத்து நாட்டின் ஆட்சி நிர்வாகப் பொறுப்பை மன்னர் ஹசன் ஏற்றுக்கொண்டுள்ளார். இதுசம்பந்தமான பிரகடனம் நேற்றிரவு வெளியிடப்பட்டது.

வானொலி மூலம் மன்னர் ஹசன் பொதுமக்களுக்கு அறிக்கையொன்றும் விடுத்தார்.

மொரோக்கோவில் ஸ்திரமான அரசியல் நிலையை ஏற்படுத்துவதற்குச் சென்ற நான்கு மாதகாலமாகத் தாம் எடுத்த முயற்சிகள்யாவும் பயனற்றுப் போய்விட்டதாகவும் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டத் தாம் விடுத்த வேண்டுகோளுக்கும் மக்கள் செவிசாய்க்கத் தவறிவிட்டனரென்றும் மன்னர் கூறினார். இந்நிலையில் நாட்டின் ஆட்சி நிர்வாகப் பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லையென்றும் அவர் கூறினார்.

நாட்டில் அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டுப் பார்லிமெண்டைக் கலைத்தற்கு மன்னர் விளக்கம் தெரிவிக்கையில் கூட்டு அரசாங்கம் ஏற்படுத்துவதற்குத் தாம் அரசியல்கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தியபோது அவர்கள் விடுத்த கோரிக்கையும் அவர்கள் தெரிவித்த நிபந்தனைகளும் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதவைதனாக இருந்தன என்று கூறினார்.

இச்சமயத்தில் மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடத்துவது தேர்தல் பிரசாரத்தில் குடுமிபிடித்து பலாத்காரக் கிளர்ச்சிகளுக்கு வழிவகுக்குமென்று தாம்கருதியதாலேயே நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதாகவும் மன்னர் தெரிவித்தார். நாட்டின் அரசியல் திட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்படவேண்டியது அவசியமாகிவிட்டதென்றும் திருத்தம் செய்யப்பட்டதும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி அதற்கு மக்களின் அங்கீகாரம் பெறப்படுமென்றும் மன்னர் ஹசன் தெரிவித்தார்.

சிகானுக்-சிங் சந்திப்பு

நாம்பென், ஜூன் 8

இந்திய வெளிவிவகார இலாகா துணைமந்திரி திரு. தினேஷ்சிங் நேற்று இங்கு கம்போடிய அரசாங்கத் தலைவர் இளவரசர் நொரடம்சிகனுக், கம்போடிய வெளிவிவகார மந்திரி ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

வாஷிங்டனில் டெய்லர்

வாஷிங்டன், ஜூன் 8

தென்வியட்நாமில் அமெரிக்க தானிகராகக் கடமையாற்றும் ஜெனரல் மாக்ஸ்வெல் டெய்லர் வாஷிங்டன் வந்து சேர்ந்துள்ளார். வியட்நாம் நிலைமைபற்றி அவர் ஜனாதிபதி ஜோன்சனிடம் தெரிவிப்பார்.

புரட்சி சதிதோல்வி

கார்ட்டூம், ஜூன் 8

சூடானில் அரசாங்கத்தைக் கவிழ்க்க நடைபெற்ற புரட்சிச் சதி தோல்வியில் முடிந்ததாக அரசாங்கம் அறிவித்தது. இது சம்பந்தமாக முன்னாள் ராணுவ அதிகாரிகள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிதி நிலைமை சீரடைகிறது

லண்டன், ஜூன் 8

பிரிட்டனின் நிதிநிலைமை சீரடைந்துவருவதாக பிரிட்டிஷ் நிதிமந்திரி தெரிவித்துள்ளார்.

கால் இடறி விழுந்து இளம் ஜோடி மரணம்

திருச்செங்கோடு, ஜூன் 8

திருச்செங்கோடு மலையின் உச்சியில் உள்ள விநாயகர் கோவிலை வலம் வந்த தம்பதிகளிருவரும் கால் தவறி 750 அடி ஆழமான பள்ளத்தாக்கில் வீழ்ந்து மாண்டனர். சேலத்தைச் சேர்ந்த 22 வயதான பலராமனும் 19 வயதான அவரது மனைவி ராஜம்மாவுமே இக்கோரவிபத்துக்குள்ளாயினர். பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

ஜமீன்வாரிசுகள் ரிக்ஷா இழுக்கின்றனர்

ஹைதராபாத், ஜூன் 8

முன்னாள் ஜமீன்தார்களின் பின் வாரிசுகள் சிலர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஜமீன் ஒழிப்பினாலும் நஷ்டஈடு கொடுப்பது நிறுத்தப்பட்டதாலும் சிறு ஜமீன்தார்கள் கஷ்டப்படுவதாக ஜமீன்தார்கள் சங்க அமைப்பாளர் நவாப் மீர் லஹீத் அலிகார் கூறினார்.

சிலர் இரவு நேரங்களில் சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓட்டுகிறார்கள். சிலர் மண்ணெண்ணெய் விற்றுப் பிழைக்கிறார்கள், ஹைதராபாத்தில் இருக்கும் 10,000 ஜமீன்தார்களில் 9000 பேர் சிறு ஜமீன்தார்கள்.

சுதந்திரக்கட்சி தனிநபர் சுதந்திரம்

சென்னை, ஜூன் 8

ஆட்சி மொழிச் சட்டதிருத்த மசோதா பார்லிமென்டுக்கு வருகையில் சுதந்திரக் கட்சியின் தனி அங்கத்தவர்கள் தம் இஷ்டம்போல் வாக்களிக்கலாம் என்று கட்சியின் நிர்வாகக் குழு தீர்மானித்தது.

ஆலயத்தில் சிரமதானம்

யாழ்ப்பாணம், புதன்

"சிரமதானம் தான் ஒரு பொதுச் சேவை. இதனை செய்ய இளைஞர்கள் பின்நிற்கக்கூடாது" என்று இணுவில் தேசியவிவசாயிகள் கழகத்தின் ஆதரவில் இணுவில் காரைக்கால் சிவன்கோவில் வீதிகளை சிரமதான முறையில் திருத்தும் நிகழ்ச்சிகளை நடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6 மணிக்கு ஆரம்பித்துவைத்த இணுவில் தமிழரசு வாலிப முன்னணியின் தலைவர் திரு. ச. செல்வரத்தினம் குறிப்பிட்டார். சிரமதானத் தொண்டர்கள் மிகவும் உற்சாகத்துடன் வேலையில் ஈடுபட்டனர். தேசிய விவசாயிகள் கழகத்தின் தொண்டர்கள், விவசாயிகள் ஆகியோர் இதில் பங்குகொண்டனர், இந்த சிரமதான இயக்கத்துக்கு பலரும் ஒத்துழைப்பு நல்கினர்.

திருட்டுக்கள்

சாவகச்சேரி, செவ்.

மட்டுவில், துணுவில் பகுதிகளில் திருடர்களின் நடமாட்டம் மிகவும் அதிகரித்துள்ளது. கடந்த வாரம் ஒரே இரவில் இரண்டு, மூன்று வீடுகளில் திருட்டுப்போய்விட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பீதியும் அச்சமும் அடைந்துள்ளனர்.

காணி சுவீகரிப்பு தடைக்கு கிராமசபை ஆட்சேபம்

யாழ்ப்பாணம், புதன்

ஸ்தலஸ்தாபன சபைகள் மூலம் காணிகள் சுவீகரிப்பதை தடை செய்வதற்கு புதிய ஸ்தலஸ்தாபன அமைச்சர் சட்டம் கொண்டுவர விரும்புதாக ஒரு சிங்கள தினசரியில் செய்தி வெளிவந்ததாகவும் அது உண்மையானால் கண்டிக்கப்படவேண்டியது எனவும் பொல்காவலை கிராமசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. குறிப்பிட்ட தீர்மானத்தின் பிரதிகள் நாட்டில் உள்ள சகல நகரசபைகளுக்கும், கிராமசபைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: ஸ்தலஸ்தாபன மன்றங்கள் மூலம் தனது பிரதேசத்தின் பொது முன்னேற்றத்திற்காக தேவையான சேவைகளை பூர்த்தி செய்வதற்கு சட்டபூர்வமாக ஓர் காணியை சுவீகரிப்பதற்கு ஓர் விண்ணப்பம் செய்யவேண்டியது வழமை. ஆனால் புதிய அரசாங்கத்தில் ஸ்தலஸ்தாபன அமைச்சரின் கட்டளையென குறித்து ஏப்ரல் மாதம் 4-ந் திகதி "லங்காதீப" பத்திரிகையில் வெளிவந்த "ஸ்தலஸ்தாபன மன்றங்கள் காணி சுவீகரிப்பதற்கு தடை செய்யப்படும்" என்ற செய்தி உண்மையானால், அதைப்பற்றி இக்கிராமசபையின் ஆட்சேபனையைத் தெரிவிப்பதோடு, சட்டபூர்வமாக காணி சுவீகரிக்கும் மசோதாவின் (308-ம் அத்தியாயத்தின்) கீழ் காணி சுவீகரிக்கும்போது, ஸ்தலஸ்தாபன அமைச்சருக்கும், காணி அமைச்சருக்கும் அதன்பிரகாரம் கிடைத்திருக்கும் அதிகாரங்களுக்கிணங்க ஏதாவது சூழல்கள் நிகழ்ந்தால் அவைகளைத் தடை செய்வதற்கு அதிகாரமும் இருக்கும்போது, எல்லா வேண்டுகோள்களையும் தடுப்பதற்கு கட்டளையிடுவது சாதாரணமற்றதென்றும், ஆகவே இதுவரை காலமும் ஸ்தலஸ்தாபன மன்றங்கள் மூலம் சட்டபூர்வமாக காணி சுவீகரிப்பதற்கு இருந்த சாதாரண வேண்டுகோளின்படி மீண்டும் ஆராய்ந்து அவைகளுக்கிருந்த முன்னைய அதிகாரங்கள் பிரகாரம் காணிகளை சுவீகரித்துக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென இக்கிராமசபைக் கேட்டுக்கொள்கிறது.

குற்றச்சாட்டும் விளக்கமும்

யாழ்ப்பாணம்; புதன்

சென்ற மாதம் 5-ந் திகதி அநுராதபுரம் விவேகானந்த மகா வித்தியாலயத்தில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா தலைமையில் கூடிய நிர்வாகசபையில் மத்திய மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தினால் தாய்ச்சங்கத்தில் நம்பிக்கை இல்லையெனக் குற்றஞ்சாட்டி அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் பரிசீலனைசெய்யப்பட்டு அறிக்கையை வெளியிடவேண்டுமென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. மத்திய மாகாணத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு. கா. முத்தையா உட்பட பல மாகாணச் சங்கப் பிரதிநிதிகளும் சமுகமாயிருந்தனர். அறிக்கையின் விபரம் வருமாறு-

வெளி மாகாணங்களில் 8 வருடங்களுக்கு மேல் சேவை செய்த சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களில் விண்ணப்பித்தோரை அவர்களது சொந்த மாவட்டங்களிலுள்ள சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு மாற்றுவதற்கு எமது சங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்துள்ளது. கடந்த வருடாந்தக் கூட்டத் தீர்மானத்தின்படி இக்கருமத்தைச் சமுகமாகச் செய்துமுடிப்பதற்காக இடமாற்றச் சபைத்தலைவர் முதல்கொண்டு கல்வியதிகாரிகள் பலரையும் நான்கு தடவைகள் மனுச் சமர்ப்பித்தும் பேட்டி கண்டுள்ளது. தொடர்ந்து புதிய அரசாங்கத்தில் இருமுறைகள் கல்வி மந்திரியையும் மற்றும் அதிகாரிகளையும் பேட்டிகண்டு மனுச் சமர்ப்பித்து சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர் மாற்றம் சம்பந்தமான நிலைமைகள் நன்கு விளக்கிக் கூறப்பட்டது.

குறித்த பேட்டியின் முடிவில் குறித்த மாற்றம் சம்பந்தமான நிலைமைகளை நன்கு விளக்கியமை காரணமாக எமது கோரிக்கையை ஒப்புக்கொண்டு ஏற்ற ஒழுங்குகள் செய்வதாக வாக்களித்தனர், எனினும் நிர்வாகத்தின் தாமதத்தால் அதன் பயனை மாற்றத்துக்காக எதிர்பார்த்திருந்த எங்கள் சங்க உறுப்பினர் அடையமுடியாமையால் மனம் தடுமாறிக் குற்றம் பாரித்து மத்திய மாகாணத் தமிழாசிரியர் சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. தாய்ச்சங்கத்திற்கு அறிவிக்க முன்னரே பத்திரிகையில் செய்தி வெளியிட்டது வருந்தற்குரியது.

திருத்தப்படாத காணிகள்

முல்லைத்தீவு, செவ்

முல்லைத்தீவு 2-ம் வட்டாரத்தைச்சேர்ந்த சின்னத்தங்காடுக் குடியேற்றத்திட்டத்தில் சென்ற சில வருடங்களுக்குமுன் சில அரசாங்க ஊழியருக்கு மத்திய வகுப்பின் கீழ் காணிகள் வழங்கப்பட்டன. இக்காணிகளை வழங்கியது முதல் இதுவரை திருத்தப்படாமல் இருப்பது கண்டு வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் மேற்படி காணிகளைப் பெற்றவர்கள் இவ்வூர் நிரந்தரவாசிகள் அல்ல என்றும் இக்காணிகளை ரத்துச்செய்து ஊரவர்களுக்கு வழங்கவேண்டுமெனவும் அரசாங்க அதிபரிடம் கேட்டுக்கொண்டார். இதற்கு அரசாங்க அதிபர் இணக்கம் தெரிவித்ததாக அறியப்படுகின்றது.

உசன் வழக்கில்

தண்டனை ஒத்திவைப்பு

சாவகச்சேரி, செவ்

உசன் வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. பி. ஹூபேர்ட் சில்வா விசாரணையின் பின்னர் எதிரிகள் நால்வரையும் குற்றவாளிகளாகக் கண்டு தண்டனை வழங்குவதை இம் மாதம் 15-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். இதுவரை காலமும் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த நான்கு எதிரிகளுள் முதலாம் எதிரியை ரிமாண்டில் வைக்குமாறும் மற்றைய மூன்று எதிரிகளைத் தொடர்ந்து முந்திய பிணையிலேயே செல்லுமாறும் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

இவ் வழக்கில் உசனில் செல்லப்பா இராசதுரை என்பவரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாக அதே ஊரைச்சேர்ந்த ஆசைப்பிள்ளை அரசரத்தினம் மீதும் இராசதுரையின் மனைவி மகேஸ்வரியைப் போத்தலாலும் கைகளாலும் அடித்துக் காயப்படுத்தியதாக அரசரத்தினத்தின் மனைவி பத்தினிப்பிள்ளை மீதும் மற்றும் வேலாயுதர் கந்தையா அல்லது கனகரத்தினம் கணபதிப்பிள்ளை வெற்றிவேலு ஆகியோர்மீது முதல் இரண்டு எதிரிகளுக்கும் உடந்தையாக இருந்ததாகவும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

முதல் இரண்டு எதிரிகள் சார்பில் திரு. வி. செல்லத்தம்பியின் உதவியுடன் திரு ஜெயசிங்கமும், மூன்றும், நாலாம் எதிரிகள் சார்பில் திரு இ. டா. சிவகுருவின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதனும் ஆஜரானார்கள். சாவகச்சேரி பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. ஆர். தேவசகாயத்தின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. சி. கணேசலிங்கம் வழக்கை நடத்தினர்.

கலைக்கழகம் நடத்தும் நாடகப்போட்டி

பம்பலப்பிட்டி, செவ்

இலங்கை கலைக்கழகம் தமிழ் நாடகக் குழுவின் ஆண்டுதோறும் நடத்தும் நாடகம், நாட்டுக்கூத்துப் போட்டிகளும் நாடக எழுத்துப்போட்டியும் இவ்வருடமும் நடைபெறும் என நாடகக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

1965-ம் ஆண்டின் சிறந்த நாடகம்

இந் நாடகப்போட்டி இரு பிரிவினதாய் அமையும். ஒன்று நாட்டுக்கூத்து மரபு வழிவருவன. மற்றது, தற்கால நாடக முறையில் அமைவன. இவ்வாண்டின் சிறந்த நாடகம் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் இவ்வாண்டு செப்டம்பர் 30-ம் திகதிக்கு முன்னர் மேடையிடப்படுவனவற்றிலிருந்தே தெரிந்தெடுக்கப்படும்.

பாடசாலைகளுக்கான நாடகப்போட்டியும் மேற்குறித்த இரு பிரிவினதாய் அமையும். ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி பரிசுகள் வழங்கப்படும்.

நாடக எழுத்துப்போட்டி

இலங்கைத் தமிழ் நாடகாசிரியர்களை ஊக்குவிப்பதற்காக ஒழுங்குசெய்யப்பட்ட இப்போட்டிக்கென அனுப்பப்படும் நாடகங்கள் சரித்திரம் அல்லது இலக்கியம் அல்லது இன்றைய வாழ்வியல் சம்பந்தப்பட்டனவாயிருத்தல் வேண்டும். சிறந்தவையெனத் தெரிவு செய்யப்படும் நாடகங்களில் முதலாவதற்கு ரூபா 600/-ம் இரண்டாவதற்கு ரூபா 250/-ம் மூன்றாவதற்கு ரூபா 150/-ம் பணப்பரிசாக வழங்கப்படும்.

சமசமாஜக் கட்சியிலிருந்து வடபகுதி பிரமுகர் ராஜினாமா

காரணத்தை விளக்கி டாக்டர் பெரேராவுக்குக் கடிதம்

கிளிநொச்சி, செவ்

நீண்டகாலமாகச் சமசமாஜக் கட்சியில் அங்கம்வகித்தவரும், இரண்டு பொதுத்தேர்தல்களில் கிளிநொச்சித் தொகுதியில் லங்கா சமசமாஜக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டவருமான திரு. வி. ஆனந்தசங்கரி லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து ராஜினாமா செய்துகொண்டார்.

தனது ராஜினாமாவுக்கான காரணத்தை விளக்கிக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம், பெரேராவுக்கு அவர் ஒரு கடிதமும் எழுதியிருக்கிறார்.

கட்சி அபேட்சகராக கரைச்சி கிராமசபைத் தலைவராகவோ அங்கத்தவராகவோ தாம் தெரிவுசெய்யப்படவில்லையாதலால் கிராமசபைத் தலைவர் பதவியைத் தொடர்ந்து வகிக்கத் தாம் முடிவுசெய்திருப்பதாக திரு ஆனந்தசங்கரி தெரிவிக்கிறார். வேறெந்தக் கட்சியிலும் சேரும் நோக்கம் தமக்குத் தற்சமயம் இல்லையென்றும் அவர் கூறுகிறார்.

டாக்டர் என். எம். பெரேராவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் திரு. ஆனந்தசங்கரி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட பரிசீலனையின் பின் பலகாலமாக நான் அங்கத்துவம் வகித்து வந்த இலங்கை சமசமாஜக் கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்வதாக மிக வருத்தத்துடன் முடிவுசெய்துள்ளேன். கட்சியையோ அன்றி எனையோ 1960-ம் ஆண்டுக்கு முன்தெரிந்திராத கஷ்டமானதும், மிக விசாலமானதுமான ஓர் தொகுதியில் எமது கொள்கையை வளர்ப்பதற்காக அயராதுழைத்தவன் என்ற காரணத்தினால் எனது இம்முடிவு தங்கட்கும் எனது கட்சித்தோழர் பலருக்கும் ஆச்சரியத்தையூட்டுமென நான் அறிவேன். 1960-ம் ஆண்டுபாராளுமன்றத் தேர்தலில் கிளிநொச்சி தொகுதிக்குக் கட்சி வேட்பாளராக நியமிக்கப்பட்ட காலம்தொட்டு இன்றுவரை, சாதாரணமாக ஓர் கட்சிக்காரன் செய்யக்கூடியதிலும் பார்க்க கூடுதலான முறையில் சொல்லமுடியாத கஷ்டங்களையும், தொழிலையும் இழந்து அனுபவித்து வந்துள்ளேன்.

கண்டிக்கத் தவறிவிட்டீர்கள்

கட்சியுடன் எனக்குள்ள நெருங்கிய தொடர்பையும், தங்கள் மீதுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையையும் தாங்கள் அறிவீர்கள். ஐக்கிய இலங்கையில் எண்ணற்ற பல உரிமைகளை நாளுக்கு நாள் பறிக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் கஷ்டம் அனுபவித்துவந்த சிறுபான்மை இனமாகிய தமிழ் இனத்திற்கு நீதி வழங்கக்கூடியவர் தாங்களே அன்றி வேறு யாருமில்லை என நான் உறுதியாக நம்பினேன். வடபிரதேசத்திலுள்ள சமசமாஜிகளாகிய நாங்கள் தங்களை உயர்ச்சியாகவே மதித்து வந்தோம். இன்று கட்சியில் தமிழ் இனத்திற்கு பாதகமான போக்கைக் கண்டிக்கவேண்டிய புனித

(5-ம் பக்கம் பார்க்க)

REGAL - JAFFNA
NOW SHOWING
Danny Kaye
in
THE MAN FROM
THE
DINERS' CLUB

வெற்றிகரமான 4வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு)
விஜிதா (ஹட்டன்)
தீவோலி (நுவரெலியா)
வெம்பிலி (கண்டி)
மொடேர்ன் (பதுளை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30 6-30, 9-30

★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ்.ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு

பீனிசமா?
உடனடி நிவாரணத்திற்கு
இன்றே
உங்கள் வியாபாரியிடம் வாங்கிப் பாவியுங்கள்!
அருத எண்ணெய்
அறுபசாம் பச்சை எனும் தமிழ் மூலிகையும்
வேறு 44 ஆயுர்வேத மூலிகைகளும் சேர்ந்தது.
கண் — தலை — காது — மூக்கு
சம்பந்தப்பட்ட சகல வியாதிகளுக்கு சாலச் சிறந்தது!
—சிறுவர் முதல் பெரியோர்வரை பாவிக்கலாம்—
தயாரிப்பாளர்:
பி. எம். திசாநாயக்க
அருத எண்ணெய் தொழிலகம், கம்பளை. போன்: 454
யாழ்ப்பாணத்திற்கு ஏகவிநியோகஸ்தர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 541. 7068)

விளம்பரம்

கேள்விப்பத்திரம்

நெடுந்தீவுக் கிராமச் சங்கத்தால் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ந் திகதி மதியம் பன்னிரண்டு வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

நடுக்குறிச்சி பிள்ளையார் கோவில் ரோட் அமைத்தல் மற்றும் விபரங்களை நெடுந்தீவுக் கிராமசபைக் கந்தோரில் கந்தோர் நேரங்களிற் பெற்றுக் கொள்ளலாம்.

ம. கணபதிப்பிள்ளை
கி. ச. தலைவர்.
கிராமசபைக் காரியாலயம்,
நெடுந்தீவு. 407

திருகோணமலை நகராண்மைக்கழகம் அசைவுள்ள பொருட்களின் விற்பனவு

1962-ம் ஆண்டு 2-ம், 3-ம், 4-ம் காலாண்டிற்குத் திருகோணமலை புனித மரியாள் வீதி, 60-ம் இலக்கத்திலுள்ள மனையின் பெயரால் இருக்கும் சோலைவரி நிலுவையை அறவிடும் பொருட்டு, நகரசபைகள் சட்டத்தின் (அத்தியாயம் 255) 170 (1-ம் பிரிவிற் இணக்கமான மாநகர சபைகள் சட்டத்தின் (அத்தியாயம் 252) 252 (1-ம் பிரிவின் பிரகாரம் திருகோணமலை நகராண்மைக் கழகத் தலைவர் பிறப்பித்த ஒரு பத்திரத்தின் மீது பறிமுதல் செய்யப்பட்ட கீழ்க்காணும் அசையும் பொருட்களாவும், 1965 ஜூன் 19-ந் தேதி சனிக்கிழமை 9-30 மணி தொடக்கம் (அதற்கிடையில் வரித்தொகையும், செலவினங்களும் செலுத்தப் படாவிடில்) திருகோணமலை நகராண்மைக் கழக மண்டபத்தில் வைத்து ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

சி. சிவானந்தம்,
நகராண் [illegible] ந்,
திருகோணமலை.

நகராண்மைக்கழகப்பணிமனை,
திருகோணமலை. 7 ஜூன் 1965

பொருட்களின் விபரம்

1. கட்டில் ... ஒன்று
2. சாய்வனை (செற்றி) ஒன்று

408

வானொலி நிகழ்ச்சிகள்

புதன் 9-6-65

கொழும்பு

(செய்திகள் காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 காதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 6-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-15 கிலிய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை 6-45 பாட்டு, 7-30 பேச்சு, 8-00 முன்னிப்பிழைச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்த இசை.

கலாமன்ற நிர்வாகிகள்

சாவகச்சேரி, செவ் யாழ்ப்பாணம், "பி, எஸ்" கலாமன்ற நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்- வ. ம. செல்வரத்தினம், தலைவர்- அ. பிரான்சிஸ் ஜெனம், செயலாளர்- ஆ. அகஸ்டீன், பொருளாளர்- பி. என். ராஜேந்திரன். நிர்வாகசபை, அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பேச்சு ஆய்வுத் திறன் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, செவ் வடமராட்சி தமிழ் ஆசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்படும் வருடாந்த மாணவர் பேச்சுத் திறன் ஆய்வு போட்டிகள் வட மத்திய ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன.

ஆண் பெண் இருபாலாருக்கும் மூன்று பிரிவாக நடாத்தப்பட்ட டி போட்டிகளில் 20 பாடசாலைகளில் இருந்து 77 மாணவர்கள் கலந்துகொண்டனர். போட்டியில் தெரிவுசெய்யப்பட்டோர் விபரங்கள்:

கீழ்ப்பிரிவு பெண்கள்

ஏ. பத்மா, சென்தோமஸ் ஆர். கி. பாடசாலை; ச. பத்மாவதி, வராத்துப்பளை இ. த. க. பாடசாலை, இ. பரமேஸ்வரி, வல்வெட்டி இ. த. க. பாடசாலை.

கீழ்ப்பிரிவு ஆண்கள்

க. குணேந்திரராஜ, வராத்துப்பளை இ த பாடசாலை நா. பாக்கியநாதன் புலோலி மெ மி. பாடசாலை; க. செஷேந்திரன் புலோலி ஆர் சி. பாடசாலை.

மத்தியபிரிவு பெண்கள்

யோ. மேரிஆன் ஜெயராணி சென்தோமஸ் ஆர் சி பாடசாலை; அ. அல்பன்சா இந்துராணி வதிரி தெ ஜே க பாடசாலை, மேரி கிறெஸ்பற்றிமா வதிரி தெ ஜே க பாடசாலை.

மத்தியபிரிவு: பெண்

க. கணேசமூர்த்தி, புலோலி மெ மி பாடசாலை, க. பாலையா இளையாணன் அரசினர் பாடசாலை, க. நாகேந்திரன் வராத்துப்பளை இ த க பாடசாலை

மேற்பிரிவு: ஆண்

சி. நாமகள் வதிரி தெற்கு ஜே க பாடசாலை, றெஜினிஸ் புஷ்பானந்தருபி சென்தோமஸ் ஆர் சி பாடசாலை. இ. ஜேஸ் இரட்னேஸ்வரி வதிரி தெற்கு ஜே க பாடசாலை,

பேச்சுப்போட்டிக்கு வடமராட்சி தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. சி. குருநாதன் தலைமைவகித்ததுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கினார்.

இப்போட்டிகளில் முதலிரு இடங்களையும் பெற்றோர், வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் நடத்தும் மத்திய பேச்சுப்போட்டியில் கலந்துகொள்வாரென்பது குறிப்பிடக்கூடியதாகும்.

சமசமாஜக் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மான கட்டமையைச் செய்ய தவறியதற்குத் தாங்களே பொறுப்பாளியாவீர்கள்.

நாங்கள் தமிழ் இனத்திற்காகச் செய்த எண்ணற்ற தியாகங்களுக்காகத் தமிழ் இனம் என்றுமே தங்களுக்கு நன்றி செலுத்தியது கிடையாது. ஆகவே தற்போதைய தங்கள் போக்கும் சரியாகத் தோன்றலாம். தங்களுக்குப் பதிலாக எமது தமிழினம் இல்லை. நமது தமிழ்த் தலைவர்கள் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறியவைத்து 1960-ம் ஆண்டு பதவிக்கு மீண்டும் வருவதற்காக வகுப்புவாத வெறியை மிகவும் கீழ்த்தரமான முறையில் தூண்டிவிட்டது மல்லாமல் நாடு என்றும் கண்டிராத சில வகுப்புவாதிகளை எல்லாம் தமது தேசிய அரசாங்கம் என்று அழைக்கப் படுகின்ற அந்த அரசாங்கத்தில் வைத்திருக்கும் ஒருவரை "ஜனநாயகத்தின் காப்பாளன்" எனப் போற்றுகின்றனர்.

நமது தமிழ்த் தலைவர்கள் தற்போதைய அரசாங்கத்தில் சில பிற்போக்குவாதிகளின் அரசியல் வாழ்க்கையை பாதுகாக்க உதவினரேயன்றி தமிழ் மொழியைக் காக்கவல்ல.

தமிழர் சமத்துவமாக வாழவேண்டும்

பதவியேற்று இரண்டு மாதங்களாகியும் இவ்வரசாங்கம் தமிழ்மக்களை நோக்கியுள்ள பிரச்சனைகளில் எவையேனும் தீர்த்துவைக்கவில்லை. தமிழ்த் தலைவர்கள் தமது புதிய சகபாடிகளின் சுயரூபத்தையும், தமது பிழைகளையும் உணரும்காலம் அதிதூரத்தில் இல்லை. தங்களுக்கு சிறந்த எதிர்காலம் அமைய வேண்டுமென வாழ்த்தி. எனது இனத்தின் அடிமைத்தளையை அகற்றிப்போராட என்னை விடுவிக்குமாறு வேண்டுகிறேன். இரண்டாந்தரப் பிரஜைகளாக நாம் வாழவிரும்பவில்லை. தமிழ்மக்களின் இழந்த உரிமைகள் மீட்கப்பட்டு நாம் சிங்கள மக்களுடன் சமத்துவமாக ஐக்கிய இலங்கையிலோ அல்லது பிளவுபட்ட இலங்கையிலோ வாழ வேண்டும். இதுவே எனது ஆதரவாளர் பலரின் விருப்பமுமாகும்.

கல்லூரிகளில் கிரிக்கெட்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்குமிடையில் அண்மையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மகாஜனக் கல்லூரி 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கோஷ்டியினர் தங்கள் முதலாவது இன்னிங்ஸில் 204 ஓட்டங்களை எடுத்தனர். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தினர் தமது முதலாவது இன்னிங்ஸில் 102 ஓட்டங்களை எடுத்திருந்தனர்.

கனகரத்தினம் மகாவித்தியாலயம் இரண்டாவது இன்னிங்ஸில் 133 ஓட்டங்களை எடுத்திருந்தது. மகாஜனா தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கட் நஷ்டத்துக்கு 33 ஓட்டங்களை எடுத்து 9 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

⁂

யாழ் மத்தியகல்லூரிக்கும் கனகரத்தினம் மகாவித்தியாலயத்துக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி ஒரு இன்னிங்ஸால் வெற்றியீட்டியது.

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. கொக்குவிலில் நடைபெற்ற இப்போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி முதலாவது ஆட்டத்தில் 174 ஓட்டங்களையும் இரண்டாவது ஆட்டத்தில் 4 விக்கட் நஷ்டத்துக்கு 45 ஓட்டங்கள் எடுத்தது. ஸ்கந்தவரோதயா முதலாவது ஆட்டத்தில் 137 ஆட்டங்களையும் இரண்டாவது ஆட்டத்தில் 9 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 206 ஓட்டங்களையும் எடுத்தது. ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த சதீஸ்நாதன ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்கள் எடுத்தது குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

⁂

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி 5 விக்கட்டுகளால் வெற்றி பெற்றது. யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி முதலாவது ஆட்டத்தில் 222 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாவது ஆட்டத்தில் 66 ஓட்டங்களை எடுத்தது. யூனியன் கல்லூரி முதலாவது ஆட்டத்தில் 125 ஓட்டங்களையும் இரண்டாவது ஆட்டத்தில் 56 ஓட்டங்களையும் எடுத்தது.

⁂

மகாஜனக் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்குமிடையில் மானிப்பாயில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மகாஜனக் கல்லூரி 10 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. மகாஜனா முதலாவது ஆட்டத்தில் 105 ஓட்டங்களையும் இரண்டாவது ஆட்டத்தில் 144 ஓட்டங்களையும் எடுத்தது. மானிப்பாய் இந்துக்கல்லூரி முதலாவது ஆட்டத்தில் 94 ஓட்டங்களையும் இரண்டாவது ஆட்டத்தில் 145 ஓட்டங்களையும் எடுத்தது. மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த சிறீரங்கன் இரண்டு ஆட்டங்களிலும் 16 விக்கட்டுகளை கைப்பற்றினார். மானிப்பாய் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த பக்தசோதி இரண்டாவது ஆட்டத்தில் 63 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

வரி விளம்பரம்

காணி விற்பனவு

நீர்வேலி தெற்கு வெண்காயச் சங்கத்திற்குப் பக்கமாகவும், நீர்வேலி தெற்கு வயிரவ கோயிலுக்கு அண்மையில்வடக்குப் பக்கத்திலுள்ள 3 அறைகள் கொண்ட 2 பரப்புக் காணியும் அதன் அருகிலுள்ள 8 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு வீட்டைச் சேர்ந்த இரண்டு பரப்பைத் தவிர்த்தும், 8 பரப்பை இரண்டாகப் பிரித்து தனித்தனியேயும், அல்லது ஒருமித்தும் விலைக்குக் கொடுக்கப்படும். விரும்புவோர் மேற்காணும் விலாசத்துக்கு நேரிற் காணவும். விற்பனையாளர்: கெ. கெ. அம்புறோஸ்மேற் பார்த்து நம். 16 மடம்வீதி, யாழ்ப்பாணம். 383

விற்பனைக்கு

வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு ஆனைப்பந்தி டிஸ்பென்சரிக்கு முன்னுள், 232 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 387

கல்வி

திறமையான ஆய்வுவகுப்புக்களும், தனிப்பட்ட கவனமும் கீழ்க்கண்டவகுப்புகளுக்கண்டு: பி. ஏ., ஜி. ஏ. கியு, ஜி. சி. ஈ, உயர்தரம் கலை / விஞ்ஞானம் ஜி. சி. ஈ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம். ஆரம்ப ஜி. சி. ஈ., விஞ்ஞானம் ஆங்கிலம் / தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம், சிங்களம்: யுனிட்டெட், இன்ஸ்டிடியூட், நெல்லியடி, கரவெட்டி / 107 பருத்தித்துறை வீதி, கல்லூர், யாழ்ப்பாணம். 385

வாடகைக்கு

வீடு, மூன்று அறை. மின்சாரம், தண்ணீர் வசதிகளுடன் கொடுக்கப்படும். 30, நாச்சிமார் கோவில் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். 388

வைத்தியம்

சலரோகம், தொய்வ, வாதம், கிரந்தி, தீட்டு இரத்தல், புத்திரப்பேறு, தகுந்த முறையில் வைத்தியம் செய்பவர். பொ. செல்லையா, வைத்தியர், கந்தர்மடம் யாழ்ப்பாணம். 390

தேவை

பெற்றோல் பம்பர் உடனடியாகத் தேவை, மாதச்சம்பளம் எவ்வளவு என்றும் நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். கே. இரத்தினம் லங்கா பெற்றோல் செட் மகாத்மா காந்தி வீதி யாழ்ப்பாணம். 373

திருமண அழைப்பு

ஞானம்—சந்திரகாந்தி

வல்வெட்டித்துறை வாசியும் வனபரிபாலனக் கந்தோரில் தலைமைக் குமாஸ்தாவாக இருந்து இளைப்பாறிய திரு. வீ. சி. குழந்தைவேலுவுடைய மகன் செல்வன் ஞானவேலுவுக்கும், திரு. எ. சேதலிங்கத்தினுடைய மகள் செல்வி ராணி அம்மாவுக்கும் 10-6-65 வியாழக்கிழமை பிற்பகல் 12-32 மணியளவில் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். அன்பர்களும் உறவினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 389

பேச்சுப்போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு, செவ்

முல்லைத்தீவு ஆசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு-

கீழ்ப்பிரிவு ஆண்கள்- க. கனகசீலன், க. குசைநாதர்.

கீழ்ப்பிரிவு பெண்கள்- அ. சாந்தா, யே. யோகராணி.

மத்திய பிரிவு ஆண்கள்- யோ. செபமாலைமுத்து, இ. தங்கத்துரை.

மத்திய பிரிவு பெண்கள்- ச. மேரிதிரேசா, யோ. வசிந்தா.

மேற்பிரிவு ஆண்கள்- ப. இசிதோர், ம. அன்ரனி ஜெகநாதன்.

இவர்கள் எல்லோரும் இம்மாதம் 12ந் தேதி வட இலங்கை தமிழாசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்படும் இறுதிப் போட்டியிலும் பங்குபற்றுவார்களென முல்லைத்தீவு தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு. க. சங்கரப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

உ
சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விசுவாவசு வருஷம் வைகாசித் திங்கள் 28-ம் நாள் (10-6-65) வியாழக்கிழமை இரவு 9-00 மணி முதல் 10-00 மணிக்குள் வரும் மகரலக்கின சுபமுகூர்த்தத்தில்

மு. முத்தையாபிள்ளையின் (கொழும்பு பிரபல வர்த்தகர்) செல்வப் புதல்வன் திருநிறை செல்வன் **ராதாகிருஷ்ணனுக்கும்**	அ. பேரம்பலத்தின் (யாழ். பிரபல வர்த்தகர்) சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **திவ்யரஞ்ஜனிக்கும்**

திருவருள் துணைகொண்டு திருமணஞ்செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்,

இங்ஙனம்
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

மு. முத்தையாபிள்ளையும் பாரியாரும்
பளம் ரோட்,
கோப்பாய்.

அ. பேரம்பலமும் பாரியாரும்
"ராஜாலயா"
கடைச்சாமி ஒழுங்கை,
நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்,

அவ்வண்ணமே தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
வை. துரையப்பாவும் பாரியாரும்

புனர்வாழ்வுத் திட்டம் மீனவர்களுக்கு

பிலிப் - எஸ். ஜே. வி. ஆலோசனை

கொழும்பு, திங்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வள்ளங்கள் வழங்குவதற்காக தற்போது ஒதுக்கப்பட்டிருக்கும் 7 லட்ச ரூபாயும் ஒரு பகுதி மீன்பிடிகாரர்களுக்குக் கூட புனர்வாழ்வளிக்கப் போதாதென்று தமிழரசுக் கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கைத்தொழில் மீன்பிடிமந்திரி திரு. பிலிப்குணவர்தனவுக்கு தெரிவித்திருக்கிறார்.

மந்திரி திரு. குணவர்த்தனவும் இத்தொகை போதாதென்ற அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார். சமீபத்தில் சூறாவளி நிதியாக அரசாங்கம் திரட்டிய தொகையிலிருந்து 7 லட்சம் ரூபாயை மாத்திரம் மீன்பிடிப்பகுதிக்கு கொடுத்திருக்கிறது. இத்தொகையைக் கொண்டு மீன்பிடிகாரர்களுக்கு திருப்திகரமான புனர்வாழ்வளிக்கமுடியாதெனத் திரு. குணவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

பாதிக்கப்பட்ட கரையோரப்பகுதிகள் பற்றியும், வள்ளங்களுக்கும், குடும்பங்களுக்கும் ஏற்பட்ட சேதங்கள் பற்றியும் திரு செல்வநாயகம் மந்திரிக்கு தெரிவித்திருப்பதுடன் உடனடியாக நிவாரணமளிக்க வேண்டுமெனவும் கேட்டிருக்கிறார்.

இக்கோரிக்கையைத் தொடர்ந்து மீன்பிடி இலாகா அதிகாரிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்துவருகிறார்கள். இவர்கள் சமர்ப்பிக்கும் விபரங்களை ஆதாரமாகக்கொண்டு உதவி வழங்கப்படவிருக்கிறது.

இலங்கை அரசாங்கத்துக்கு 40லட்சம் பவுண்கள் கடனுதவி

கொழும்பு, திங்கள்

இலங்கை அரசாங்கத்துக்கு தற்போது அவசரமாகத் தேவைப்படும் வெளிநாட்டு செலாவணியைப் பெறுவதற்கு உதவு முகமாக சுமார் 40 லட்சம் பவுண்கள் கடனுதவி வழங்க லண்டனில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள வங்கிகளோடு தொடர்பு கொண்டுள்ள இலங்கையிலுள்ள வங்கிகள் இந்தக் கடனுதவியை ஸ்டேர்லிங் ரிசர்வ் நிதியிலிருந்து வழங்கும். பெறப்படும் கடனை ரூபாய்களாக செலுத்தவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

தமிழ்வாசகர்களின் கஷ்டம்

வெள்ளவத்தை; திங்கள்

கொழும்பு பொதுசன நூல்நிலையத்தில் அங்கத்தவர்களாகச் சேரவிரும்புவோர்க்கு சிங்களத்தில் அடித்த விண்ணப்பப்பத்திரங்களே கொடுக்கப்படுகின்றன. ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் வெளியாகிய விண்ணப்பப் பத்திரங்கள் அங்கு இல்லாமலிருப்பதே இதற்குக் காரணம். இந் நிலைமை கடந்த இரண்டு மாதங்களாக நிலவி வருவதாக அறியப்படுகிறது. அண்மையிலே பலபுதிய புத்தகங்கள் நூல் நிலையத்தில் சேர்க்கப்பட்ட போதும் தமிழ் வாசகர்கள் இவற்றை இரவல் வாங்கமுடியாத நிலையிலும் புது அங்கத்தவர்களாக சேர முடியாத அவலநிலையிலும் இருப்பதாகத் தெரிகிறது.

பதவி உயர்வு

கொழும்பு, திங்கள்

திரு. சி. மயில்வாகனம் அபிவிருத்தி டைரக்டராக நியமிக்கப்பட்டுள்ளார். இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டதிகாரியாகக் கடமையாற்றிய திரு. மயில்வாகனம், வர்த்தக அமைச்சின் உதவிக்காரியதரிசியாகப் பதவி உயர்வுபெற்றுள்ள திரு. ஏ. எஸ். நவரத்தினராசாவின் இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மன்ப உல் உலூம் முஸ்லிம் வித்தியாலயப் பெற்றார் ஆசிரியர் தினக் கொண்டாட்டமும் பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 18-ந் திகதி நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகளுக்கு 80 லட்சம்

கொழும்பு, திங்கள்

பொதுப்பாதைகள், பிரதான தெருக்கள் முதலியன திருத்துவதற்காகவும் அவற்றின் பாதுகாப்புச் செலவுக்காகவும் திறைசேரி 80 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது.

பொதுப் பாதைகளும், பிரதான தெருக்களும் போக்குவரத்திற்கு உகந்தநிலையில் இல்லாது கேவலமான நிலையில் இருக்கின்றது என்று பாராளுமன்றத்திலும் வெளியிலும் புகார்கள் கூறப்பட்டது இங்கே குறிப்பிடத்தக்கது.

மந்திரியை பேட்டி கண்டனர்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை தராதரப் பத்திர ஆசிரியர் குழு ஒன்று யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் கல்வி மந்திரி ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையைப் பேட்டி கண்டது. உபகுழுத் தலைவர் திரு. இ. சோமசுந்தரம் தலைமையில் திருவாளர்கள் கி. சிவசம்பு பொ. வேலும்மயிலும் ம. க. நடராசா ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

கல்விமந்திரிக்கு சம்பள முரண்பாடு பற்றி மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. தூதுக்குழுவின் முறைப்பாடுகளை ஏற்று இந்த அநீதியைப் போக்குவதற்கு சிங்கள, தமிழ் முஸ்லிம் தராதரப்பத்திர ஆசிரியர்களுக்கு வாலிப் பிரதிநிதி தரு. முன்பு தகநாயக்கா கல்விமந்திரியாக இருந்த காலத்தில் அவரால் அங்கீகரிக்கப்பட்ட இடைக்காலத் திட்டத்தை அமுல் ஆக்குவதற்கு ஏற்ற ஒழுங்குகளை உடனடியாகச் செய்து தருவதாக மந்திரி உறுதி அளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

நீர்கொழும்பில் வீடுகள் கட்டும் திட்டம்

கொழும்பு, திங்,

நீர்கொழும்பில் இரண்டு புதிய வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிக்க முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிய வருகிறது. இந்த இரண்டு திட்டங்களுக்கும் நாற்பதினாயிரம் ரூபா பிடிக்கும் என கூறப்படுகிறது. இந்த வீடுகள் மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் கட்டப்படும். இதற்காக தற்பொழுது ஆறு ஏக்கர் காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சித் தொகுதி பிரதேசங்கள் பலவற்றிலும் இதுவரை இருந்துவரும் பிரயாண கஷ்டங்களைப் போக்குவதற்குக் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் க. பொ. இரத்தினத்தின் அறிவிப்பின்படி இ. போ. ச. வடகின முகாமையாளர் திரு. நடராசா ஒழுங்குசெய்துள்ளார்.

வருகிற வெள்ளிக்கிழமை காலை கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி ஊடாகக் கல்மடுவுக்கும், பரந்தனிலிருந்து பூநகரிக்கும், முருகண்டியிலிருந்து அக்கராயனுக்கும், இயக்கச்சியிலிருந்து கோவில்வயலுக்கும் பரீட்சார்த்தமாகப் பஸ்சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

வீடு தீக்கிரை

முல்லைத்தீவு, செவ்

முல்லைத்தீவு பட்டினசபைத் தொழிலாளி ஆண்டி முனியக்கா என்பவருடைய வீடு நேற்றுக்காலை தீக்கிரையானது. பெற்றோர்கள் வேலைஸ்தலங்களுக்குச் சென்றதாகவும் பிள்ளைகளின் விளையாட்டினால் வீடு தீப்பற்றியதாகவும் சொல்லப்படுகிறது. அயலார் தீயை அணைக்க முற்பட்டனர் எனினும் முடியாதுபோய் விட்டது.

யாழ். மட்டக்களப்பு மீனவர்களுக்கு உதவி

பம்பலப்பிட்டி, செவ்வாய்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடிப்படகுகள் வாடகை முறையில் கொடுத்து அவர்கள் கஷ்டங்களை நீக்கும்முகமாக மீன்பிடி இலாகா ஒரு புதிய திட்டத்தை தயாரித்துள்ளது. மீனவர்கள் தங்கள் வருமானத்திற்கு தக்கவாறு படகுகளை நியாயமான விலைக்கு வாங்கவும் இத்திட்டம் அடிகோலுகிறது.

திட்டம் நடைமுறைக்கு வருமுன்னர், ஆரம்பத்தில் மீன்பிடிப்படகுகள் வாடகைக்கு மீனவர்களுக்கு விடப்படும். இதற்கான படகுகளை வாங்குவதற்கு மீன்பிடி இலாகா 'ஆடர்' செய்துள்ளது. இதற்காக அரசாங்கம் எட்டு லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது.

நயினை நாகபூஷணி மணிக்கோபுர கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் இராச கோபுர மகாகொண்ட (மணிக் கோபுரம்) புரதிஷ்டா கும்பாபிஷேகம் ஜூன் மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை காலை 7மணி 45 நிமிஷம் தொடக்கம் 8மணி 16நிமிஷம் வரைக்கும் நடைபெறும்.

நாளை புதன்கிழமை காலை கும்பாபிஷேகதின மணவாளக்கோல அஷ்டோத்தர சதாசங்காபிஷேகமும், யாகபூசை, தீபாராதனை முதலியனவும் இடம்பெறும். புதன்கிழமை இரவு பிரம்மஸ்ரீ சி. என. எஸ். மணிபாகவதர் 'பாலாம்பிகையின் பரிசு' என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவர்.

மஹாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஜூன் மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கும் 8 மணி 16 நிமிஷத்துக்குமிடையில் பூநகரி முழங்காவிற் பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

யாழ்ப்பாணம் விளை :

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இவையாவும் விளையாட்டு அரங்குத் திட்டத்தின் முதற் பகுதியை மாத்திரம் பூர்த்திசெய்ய எமக்குதவியுள்ளன. இதுவரையில் மொத்தமாக 34,600 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான நிதிகள் இதுவரையில் எப்படிச் சேகரிக்கப்பட்டன என்னும்கேள்வி ஏற்படுகிறது. அயராது உழைப்பவர்களான திருவாளர்கள் ஜே. வாண்சாண்டன், ஏ. எஸ். மரியநாயகம், பி. ஏ. பிரகாசம், வி. சத்தியநாதன், கே. இராசையா, ஜே. எம். இராசரத்தினம் போன்றவர்கள் பெயர்கள் இதற்கு விடை அளிப்பதற்குத் திறவுகோல்களாகும். இதயபூர்வமாக உழைத்தவர்களான கோஷ்டியினர்களைச் சேர்த்து இப்படியான சிறிய செய்திச் சுருக்கத்தில் அவர்களின் பெயர்கள் யாவற்றையும் குறிப்பிடுவது இயலாத காரியமாகும். விழாக்களையும் காட்சிகளையும் உண்டாக்கி நிதியைத் திரட்டினர்.

யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான கொடை வள்ளலான காலஞ்சென்ற கொன்றாக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்களே விளையாட்டு அரங்குக்கு முதலாவது நன்கொடையைக் கொடுத்து உதவியுள்ளார். இம் முன்மாதிரியை ஒருசிலர் பின்பற்றியுள்ளனர் ஸ்தாபனங்களில் திரு ரி. எஸ். துரைராசா மேயர் பதவி வகித்த காலத்தில் யாழ்ப்பாண நகரசபை போற்றத்தக்க நன்கொடையான ரூபா 10,000/- கொடுத்து உதவியுள்ளது. அமெரிக்க தூதர் கொடுத்துதவிய கலைநிகழ்ச்சி "கோர்டின்ரைம் யூ. எஸ். ஏ" விளையாட்டு அரங்கு — இலங்கை — அமெரிக்க சங்கத்திற்குக் கொடுத்து உதவப்பட்டது, பருத்தித்துறை ஹேட்ரி கிளப்பின் கலைநிகழ்ச்சியின் பெரும்பாகமான நிதி எமக்குக் கொடுத்து உதவப்பட்டது. நெவில்லை கம்பெனியாரின் கலைக்காட்சியின் முழுத்தொகையும் கிடைத்துள்ளது.

அடுத்த திட்டம்

இத்திட்டத்தின் அடுத்தபடியாக செய்யவேண்டியவற்றை விளையாட்டு அரங்குக் கழகம் இப்பொழுது திட்டமிட்டு நடைமுறைக்கு கொண்டுவரவேண்டும். ஒரு பவிலியன், மீதியாகவுள்ள இடத்தில் படிகள், நீச்சல் குளம், மைதானத்தை மின்சார வெளிச்சமூலம் இரவிலும் பாவிக்க வசதிசெய்தல், பாட்மின்ரன், ரேபிள் டெனிஸ், முதலிய விளையாட்டுகளுக்கு விஷேச அரங்கு யாவும் அடுத்தபடியாகச் செய்து முடிக்கப்படவேண்டியன. பணம், தக்க நிபுணர்களின் ஆலோசனை, அமைப்பாளர் யாவும் தொடர்ந்து வேலையை செய்து முடிக்க தேவைப்படுகின்றன. விளையாட்டுப் பிரியர்களான யாழ்ப்பாண மக்கள் கூடுதலான தொகையினராக முன்வந்து தங்கள் ஆதரவை தக்க முறையில் அளிப்பார்கள் என்பதில் சற்றேனும் ஐயமில்லை. விளையாட்டுப்பகுதிக்கென மந்திரியொருவர் நியமனம் பெற்றதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். 1965 ஜூ 8-ந் திகதி விளையாட்டுப்பகுதி மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா அவர்கள் தமது முதலாவது உத்தியோகபூர்வமான செயலாக யாழ்ப்பாண விளையாட்டு அரங்கைப் பார்வையிடப் போவதையிட்டு நாம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம்.

வேலணை மேற்கு பிள்ளையார் கோவில்

யாழ்ப்பாணம், புதன்

வேலணை மேற்கு மகாகணபதிப்பிள்ளையார்கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் மூன்றாந்திகதி துவஜாரோகணத்துடன் ஆரம்பமானது. இம்மாதம் பன்னிரண்டாந்திகதி தேர்த்திருவிழாவும் பதின்மூன்றாந் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுகின்றன.

இக்கோவிலின் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், சபாமண்டபம் ஆகியவை பெருந்தொகைப்பண செலவில் கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது. கோவிலின் முற்கொட்டகை சென்றாண்டு உற்சவ காலத்துக்குமுன் பூர்த்தியாகிவிட்டது. பிற்கொட்டகை வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சுப்பிரமணியசுவாமிகோவில் தேர்க்கொட்டகை, வாகனசாலை ஆகியவை நிறுவப் பலர் முன்வந்திருக்கிறார்களென்றும் இக்கோவிலின் அபிவிருத்திக்குப் பொதுமக்கள் பொருளுதவி புரியும்படியும் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

சமூகசேவை . . :

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதத்தில் 86 நிவாரணவேலைத் திட்டத்தை உண்டாக்கி சகாய வேலைவாய்ப்பு உண்டாக்கினர்களென்றும் எஞ்சிய 20,000 மக்களுக்கும் எதுவித வேலைவாய்ப்பும் இல்லை என்றும் எடுத்துரைத்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணவேலை கொடுக்க ஒரு வாரத்திற்குள்தான் நடவடிக்கை எடுப்பதாகவும், வவனியாப்பகுதிக்கு கூடுதலாக இன்னுமொரு சமூகசேவைஉத்தியோகத்தரை நியமிப்பதெனவும் திரு ரூபசிங்கா தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பல இடங்களுக்கும் சென்று பார்வையிட்ட திரு ரூபசிங்க மீண்டும் எதிர்வரும் 16-ந் திகதி இங்கு விஜயம் செய்வாரென அறியப்படுகிறது.

வறுமையின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் வேறு அரிசி இல்லையா என்று வவுனியா எம். பி. கேட்டபோது ஒரு கிழமைக்காக 2 படி அரிசியை சேர்த்து வைத்துள்ளதாக குடும்பத்தலைவி கண்ணீரும் கம்பலையுமாக பதில்தந்தார்.

இதைத் தாங்கமுடியாத உதவி அதிபர் உடனடியாக இந்த பரிதாப நிலைக்குள்ளான குடும்பத்துக்கு நிவாரண உதவி அளிப்பதாக கூறினார் கூப்பன் அரிசியை எடுப்பதற்கே அவர்களிடம் பணமில்லை என்பது எவரும் சொல்லாமலே தெளிவாகிறதல்லவா!

விருந்து . : .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி பேசுகையில் எமது பகுதியிலுள்ள சனசமூகநிலையங்கள் உறங்கும்நிலையங்களாக இல்லாமல் தொண்டாற்றும் சேவையில் இயங்குவதாக அறிவுறுத்துவதற்கு இவ்விருந்துவைபவம் ஒரு சான்றாகுமெனக் குறிப்பிட்டார்.

திருடர் தொல்லை

கிளிநொச்சி, செவ்

சென்ற சில தினங்களாக கிளிநொச்சிப்பகுதியில் திருடர்கள் தொல்லை அதிகரித்துள்ளது. இங்குள்ள வர்த்தக ஸ்தாபனங்களில் நாள்தோறும் பெருந்தொகையான பணம், பொருள் முதலியன திருடப்பட்டு வருகின்றன. இதனால் இங்குள்ள வர்த்தகர்களும் குடியேற்றவாசிகளும் பெரிதும் பீதியடைந்துள்ளனர். இத்திருட்டை ஒரு கோஷ்டியினரே செய்துவருவதாக சொல்லப்படுகிறது. ஆனால் இதுவரை எவரும் பிடிபடவில்லை.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.